கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை : திரு. ஏ.கே. மெகபூப் அலிகான், பி.எல்.எம்., எல்எல்.எம்.,
பி.ஜி.டி.பிஎம்/ஐஆர்

கூடுதல் மாவட்ட நீதிபதி , திண்டுக்கல்

**2024-**ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் **9** ஆம் நாள் செவ்வாய்கிழமை

**G.W.O.P. No.133/2022**

( மைனர் 8 வயதுள்ள ஸ்ரீகஹானை மனுதாரர் வசம் ஒப்படைக்கக் கோருவது சம்பந்தமாக)

பூங்கோதை (வயது 61/2022) ... மனுதாரர் / பாதுகாவலர்

// எதிராக //

சண்முகப்பிரியா, (வயது 30/2022) ... எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 4.7.2024ம் தேதியன்று வாய்தாவிற்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. ஒயிட் கென்னடி மற்றும் L.சித்ரா ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் R.அசோகன் மற்றும் T.முத்தமிழ் செல்வன் ஆகியோர்கள் ஆஜராகியும் பின்னிட்டு எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரிண்மையால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டும், இருந்து வரும் நிலையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எழுத்துமூல வாதுரை பரிசீலிக்கப்பட்டு, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

இளவர் குழந்தையான ஸ்ரீகஹானை, அவரது பாட்டியும், தந்தையின் தாயாருமான, மனுதாரரிடம் ஒப்படைக்க, எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி இம்மனு Guardian and Wards Act Sec. 7 , 8, 9, 10ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A K MEHBUB ALIKHAN Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.07.09 18:19:58 +0530

**2.** <u>மனுச் சுருக்கமாவது-</u>

(அ) இளவர் ஸ்ரீகஹான் மனுதாரரின் மகன் வழி பேரன். மனுதாரருக்கு இறந்துபோன சிவபாலாஜி மட்டுமே ஒரே மகன். மனுதாரரின் மகனான சிவபாலாஜிக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 6.2.2014ம் தேதியன்று திருமணம் நிச்சயிக்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம் அக்ரஹாரம் ரோடு “தேவன் மஹாலில்” இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப்பின் சிவபாலாஜியும் எதிர்மனுதாரரும் மனுதாரரின் முகவரியில் 6 மாத காலம் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தனர். இவர்களது திருமண பந்தத்தின் விளைவாக 18.2.2015ம் தேதி ஆண் குழந்தை பிறந்தது. அவரது பெயர் ஸ்ரீகஹான் என்பதாகும். தற்போது குழந்தை எதிர்மனுதாரரின் பராமரிப்பில் இருந்து வருகிறார். இந்நிலையில் குழந்தை பிறந்து சில வருடங்கள் ஆனநிலையில் எதிர்மனுதாரரின் நடவடிக்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு சிவபாலாஜிக்கும் எதிர்மனுதாரருக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் இருந்து வந்தது.

(ஆ) இந்நிலையில் 27.10.2019ம் தேதி மனுதாரரின் மகனின் செல்போனில் இருந்து வந்த அழைப்பில் திண்டுக்கல் - நத்தம் மெயின் ரோட்டில் சாயா ஓடைக்கு அருகில் சிவபாலாஜி முகத்தில் இரத்தக் காயத்துடன் இறந்துகிடப்பதை அறிந்து சம்பவ இடம் சென்றதில் மனுதாரரின் மகன் சிவபாலாஜி முகத்தில் இரத்த காயத்துடன் இறந்து கிடந்தார். விசாரணையில் மேற்படி கொலையில் கூட்டுச் சதி செய்து திட்டமிட்டு கொலை செய்த 5 நபர்களில் 3வது குற்றவாளியாக மேற்படி எதிர்மனுதாரர் கொலை சதியில் பங்குபெற்றிருப்பது புலன் விசாரணையில் தெரியவந்தது. புலன் விசாரணைக்கு பின்பு தாக்கல் செய்யப்பட்ட குற்ற பத்திரிக்கையின்படி வழக்கின் முதல் எதிரி எஸ்.எஸ் பாண்டி என்பவருடன்

A K MEHBUB ALIKHAN Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.07.09 18:20:05 +0530

எதிர்மனுதாரர் கள்ளத்தொடர்வு கொண்டு அவரை கரம் பிடிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இம்மனுதாரரின் மகளை, எதிர்மனுதாரர் திட்டமிட்டு கூட்டுசதி செய்து கொலை செய்து விட்டார்கள். தற்போது எதிர்மனுதாரர் நீதிமன்ற கைதியாக சுமார் 80 நாட்களுக்கும் மேல் சிறையில் இருந்துவிட்டு தற்காலிகமாக பிணையில் வந்து வழக்கு விசாரணையை எதிர்நோக்கி வருகிறார். இளவர் ஸ்ரீகஹானை இந்த மனுதாரிடம் ஒப்படைக்கக் கேட்டதில் எதிர்மனுதாரர் குழந்தையை ஒப்படைக்க மறுத்துவிட்டார்.

(இ) மனுதாரர் அவரது மகனைப் போன்றே இருக்கும் பேரனை பார்க்கக்கூட எதிர்மனுதாரர் அனுமதிக்கவில்லை. இதனால் மனுதாரர் மனவேதரனை அடைந்துவருகிறார். இந்நிலையில் எதிர்மனுதாரர் இளவர் குழந்தையை நீதிமன்ற கொலை வழக்கு விசாரணைக்கு செல்லும்போதெல்லாம் கூட்டிச் செல்கிறார். இந்த எதிர்மனுதாரர் இளவரிடம், அவரது கள்ளக்காதலனை தகப்பன் என்று சொல்லிக் கொடுத்து வளர்ந்து வரும் சூழ்நிலையில் மேற்படி இளவர் குழந்தையின் எதிர்காலம் கேள்விக்குறி ஆகிவிடும், மேலும் அவருக்கு சமுதாயத்தில் நல்லதொரு குடிமகனாக வளரக்கூடிய வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும் என்ற நிலை உள்ளது. இந்த மனுதாரர், மேற்படி இளவர் குழந்தையை எதிர்காலத்தில் நல்லமுறையில் வளர்த்து நல்வாழ்க்கையை ஏற்படுத்திகொடுக்கும் விருப்பத்துடன் இருக்கின்றார். ஆகவே இளவரின் தற்போதைய மற்றும் எதிர்கால நலன் கருதி இளவர் குழந்தையை மனுதாரர் வசம் ஒப்படைக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

இந்த எதிருரையில் உண்மை என ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற அனைத்தும் சுத்தப் பொய் என இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.07.09 18:20:12 +0530

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் உள்ள உறவுமுறையும், சிவபாலாஜிக்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணம், அதன்பிறகு 18.2.2015ம் தேதி இளவர் ஸ்ரீகஹான் பிறந்ததும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த மனுதாரர், எதிர்மனுதாரரை தன் கணவருடன் முழுமையாக குடித்தனம் நடத்தவிடவில்லை. குழந்தை பிறந்த பிறகும் சுமார் பல மாதங்களாக எதிர்மனுதாரர் தனது பெற்றோர் வீட்டில்தான் இருந்துவந்தார். குழந்தையை பார்க்கக்கூட வரவில்லை. பின்னிட்டு எதிர்மனுதாரரின் பெற்றோர் முயற்சி எடுத்து எதிர்மனுதாரரை கணவருடன் சேர்த்து வைத்தனர். இந்நிலையில் 27.10.2019ம் தேதி நத்தம் - திண்டுக்கல் ரோட்டில் சிவபாலாஜி காயத்துடன் இறந்துகிடந்திருக்கிறார். புலன் விசாரணை முடிவில் சிவபாலாஜி கொலை செய்யப்பட்டுவிட்டதாகவும் அதற்கான கொலை சதியில் இந்த எதிர்மனுதாரருக்கும் பங்கிருப்பதாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குழந்தையை கேட்டு உறவினர்கள் மற்றும் பொரியயோர்கள் மூலம் மனுதாரர் முயற்சித்தாக சொல்வதும், மனுதாரரை இந்த எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்று சொல்வதும், இளவர் குழந்தையை நல்லமுறையில் வளர்த்து ஆளாக்க விருப்பமாக இருப்பதாக சொல்வது பொய். எதிர்மனுதாரர் அவரது பெற்றோருடன் வசித்து வருகிறார். இளவர் மூவரது முழு கண்காணிப்பிலும் பாதுகாப்பிலும் இளவர் வளர்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் அவரை நல்லமுறையில் படிக்கவைத்து வருகிறார். மனுதாரருக்கு தற்போது 60 வயதிற்கும் மேலாகிறது, பெருளாதார ரீதியாகவும் மிகவும் சிரமமான நிலையில் இருந்துவருகிறார். குழந்தையை பராமரிக்கும் அளவிற்கு மனுதாரரின் உடல்நிலை சீராக இல்லை. மனுதாரரைவிட எதிர்மனுதாரரிடம் குழந்தை நன்றாக ஆரோக்கியமாக வளரவும் நல்ல சிறந்த கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கவும் வாயப்புக்ள் அதிகமாக உள்ளது. மனுதாரர் தனது

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.07.09 18:20:18 +0530

மகனுக்கு கிடைக்கவேண்டிய பணப்பலன்களை தனக்கே தரும்படி கேட்டு தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகிறார். அவ்வாறு அவர் எதிர்பார்த்த பதில் கிடைக்காததால் பணபலன்களில் மைனருக்கே அதிக உரிமைகள் உள்ளது என தெரிவிக்கப்பட்டதால் இவ்வளவு நாட்கள் சும்மா இருந்துவிட்டு தற்போது குழந்தையின் நலனில் மிகுந்த அக்கரை கொண்டிருப்பதுபோல் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரிடத்தில் குழந்தையை ஒப்படைக்க இந்த எதிர்மனுதாரர் விரும்பவில்லை. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. <u>இந்நிலையில் இம்மனுவில் தீர்விற்கான பிரச்சினை யாதெனில்,</u> இளவர் ஸ்ரீகஹான்-னை மனுதாரர் வசம் ஒப்படைக்க கோரும் பரிகாரம் பெற மனுதாரர் அருகதை உடையவரா**?** என்பதேயாகும்**.**

5. இம்மனுவில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். எதிர்மனுதாரர் விசாரணையின்போது அழைத்தும் அஜரின்மையால் தோன்றாத் தரப்பினராக உள்ளார்.

6. <u>தீர்வு-</u>

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துமூல வாதுரை பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு அளித்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில், மனுச்சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியமளித்து, மனுதாரரின் மகனான சிவபாலாஜிக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 6.2.2014ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது என்பதை காட்டும் திருமண பத்திரிக்கையும், திருமணத்தின்போது இருவரும் எடுத்த புகைப்படமும் ம.சா.ஆ.1

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.07.09 18:20:24 +0530

மற்றும் ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களது திருமண பந்தத்தின் விளைவாக 18.2.2015ம் தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்பதை காட்டுவதற்கான பிறப்பு சான்றிதழின் அசல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் குழந்தை பிறந்து சில வருடங்கள் ஆனநிலையில் எதிர்மனுதாரரின் நடவடிக்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு சிவபாலாஜிக்கும் எதிர்மனுதாரருக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் இருந்து வந்ததென்றும், இந்நிலையில் 27.10.2019ம் தேதி மனுதாரரின் மகனின் செல்போனில் இருந்து வந்த அழைப்பில் திண்டுக்கல் - நத்தம் மெயின் ரோட்டில் சாயா ஓடைக்கு அருகில் சிவபாலாஜி முகத்தில் இரத்தக் காயத்துடன் இறந்துகிடப்பதை அறிந்து சம்பவ இடம் சென்றதில் மனுதாரரின் மகன் சிவபாலாஜி முகத்தில் இரத்த காயத்துடன் இறந்து கிடந்துள்ளார். மேற்படி சிவபாலாஜியின் இறப்பு சான்றிழ் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணையில் மேற்படி கொலையில் கூட்டுச் சதி செய்து திட்டமிட்டு கொலை செய்த 5 நபர்களில் 3வது குற்றவாளியாக மேற்படி எதிர்மனுதாரர் கொலை சதியில் பங்குபெற்றிருப்பது புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தனது ஆதார் அடையான அட்டையின் நகலை ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார். மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில், குற்ற பத்திரிக்கையின்படி வழக்கின் முதல் எதிரி எஸ்.எஸ் பாண்டியுடன் எதிர்மனுதாரர் கள்ளத்தொடர்வு கொண்டு அவரை கரம் பிடிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இம்மனுதாரரின் மகனை, எதிர்மனுதாரர் திட்டமிட்டு கூட்டுசதி செய்து கொலை செய்து விட்டார்கள் என்றும், தற்போது எதிர்மனுதாரர் நீதிமன்ற கைதியாக சுமார் 80 நாட்களுக்கும் மேல் சிறையில் இருந்துவிட்டு தற்காலிகமாக பிணையில் வந்து வழக்கு விசாரணையை எதிர்நோக்கி

A K MEHBUB ALIKHAN Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.07.09 18:20:31 +0530

வருகிறார் என்றும், இளவர் ஸ்ரீகஹானை இந்த மனுதாரிடம் ஒப்படைக்கக் கேட்டதில் எதிர்மனுதாரர் குழந்தையை ஒப்படைக்க மறுத்துவிட்டதாகவும், தனது பேரனை பார்க்கக்கூட எதிர்மனுதாரர் அனுமதிக்கவில்லை என்றும் இதனால் மனுதாரர் மனவேதனை அடைந்து-வருவதாகவும், இந்நிலையில் எதிர்மனுதாரர், இளவர் குழந்தையை நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு செல்லும்போதெல்லாம் கூட்டிச் செல்வதாகவும் மேலும் இந்த எதிர்மனுதாரர் இளவரிடம், அவரது கள்ளக்காதலனை தகப்பன் என்று சொல்லிக் கொடுத்து வளர்த்துவரும் சூழ்நிலையில், மேற்படி இளவர் குழந்தையின் எதிர்காலம் கேள்விக்குறி ஆகிவிடும் என்றும் மேலும் அவருக்கு சமுதாயத்தில் நல்லதொரு குடிமகனாக வளரக்கூடிய வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும் என்ற நிலை உள்ளதாகவும், மேலும் இந்த மனுதாரர், மேற்படி இளவர் குழந்தையை எதிர்காலத்தில் நல்லமுறையில் வளர்த்து நல்வாழ்க்கையை ஏற்படுத்திகொடுக்கும் விருப்பத்துடன் இருப்பதாகவும், எனவே இளவரின் தற்போதைய மற்றும் எதிர்கால நலன் கருதி இளவர் குழந்தையை மனுதாரர் வசம் ஒப்படைக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சாட்சியமளித்துள்ளார். மனுப்படி உத்தரவாக கோருகிறார்.

7. இளவர் ஸ்ரீகஹானின் தாய், தந்தையருக்கு கடந்த 6.2.2014ம் தேதியில் நடைபெற்றுள்ளது என்பதும், இவர்களின் திருமண வாழ்வின் பயனாக 18.2.2015ம் தேதி ஸ்ரீகஹானின் பிறந்துள்ளார் என்பதும் ஸ்ரீகஹானின் தந்தை கடந்த 27.10.2019 தேதி கொலை செய்யப்பட்டு இறந்துள்ளார் என்பதும் ம.சா.ஆ.1 முதல் 5 வரையான ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் இளவர் ஸ்ரீகஹானின் தாயாரான எதிர்மனுதாரர் மீது மேற்படி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் 80 நாட்கள் சிறை காவலில் இருந்து தற்போது பிணையில் வெளிவந்துள்ளதாக

A K MEHBUB ALIKHAN Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.07.09 18:20:38 +0530

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை, ம.சா.1ஐ குறுக்கு விசாரணையை செய்யவில்லை. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தன்மீது குற்ற வழக்கு உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் வழக்கு சம்பந்தமாக நீதிமன்றம் செல்லும் போதெல்லாம் தனது இளவர் குழந்தையையும் அழைத்துச் செல்கிறார் என்பதையும் மேற்படி குற்ற வழக்கின் 1ம் எதிரியுடன் தன் மகனை பழகவைக்கின்றார் எனும் சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித மறுப்பும் இல்லை. எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தனது மகனை பராமரிக்கக்கூடிய வசதி வாய்ப்புகளும் வயதும் மனுதாரருக்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தும், அதனை நிரூபிக்கும் விதத்தில் சாட்சியம் முன்வைக்கப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில், இளவர் ஸ்ரீகஹான் எந்த வகுப்பு படிக்கின்றார், எந்த பள்ளியில் படித்துக்கொண்டிருக்கிறார் என்பதற்கான எந்த விளக்கமும் இல்லை. இந்நிலையில் இந்நீதிமன்றம் இருதரப்பு வழக்கினை பரிசீலித்ததில், இவ்வாறான சூழ்நிலையில் நீதிமன்றம் இளவர் குழந்தையின் நலனிற்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் எது முதன்மையானது மற்றும் உகந்ததோ அதனையே பரிசீரிக்கவேண்டுமென்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் ***“Yashita Sahu /vs/ State of Rajasthan and others”***[1] என்ற முன்தீர்ப்பில் கூறியுள்ளதை குறிப்பிட்டுள்ளது.

> **17. “ It is well settled law by a catena of judgments that while deciding matters of custody of a child, primary and paramount consideration is welfare of the child. If welfare of the child so demands then technical**

---

1*) 2020 (3) Sec. 67*

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.07.09 18:20:45 +0530

**objections cannot come in the way. However, while deciding the welfare of the child it is no the view of one spouse alone which has to be taken into consideration. The courts should decide the issue of custody only on the basis of what is in the best interest of the child.”**

***31. “ There are various factors to be taken into consideration while deciding what is best in the interest of the child. No hard and fast rules can be laid down and each case has to be decided on its own merits. We are also not oblivious of the fact that when two parents are at war with each other it is impossible to provide a completely peaceful environment to the child. The Court has to decide what is in the best interest of the child after weighing all the pros and cons of both the respective parents who claim custody of the child.”***

மேற்கண்ட முன்தீர்ப்பின் அடியொற்றி இந்நீதிமன்றம் இளவர் குழந்தையின் நலன் மட்டுமே முதன்மையானது என்பதனை கருதி அவரது மன நலனை பேணும் வகையிலும், எதிர்கால நலன் கருதியும் அவருக்கு நல்லதொரு கல்வி மற்றும் சுற்றுச்சூழலை உருவாக்கித்தரும் வகையில் மேற்படி இளவரை மனுதாரர் வசம் ஒப்படைப்பதே இளவரின் நலனுக்கு நன்மை பயக்கும் என்று கருதி, இலவர் ஸ்ரீகஹானை, எதிர்மனுதாரர், மனுதாரர் வசம் ஒப்படைக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறது, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, இளவர் ஸ்ரீகஹானை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர் வசம்

A K MEHBUB ALIKHAN Digitally signed by A K MEHBUB ALIKHAN Date: 2024.07.09 18:20:51 +0530

ஒப்படைக்கவேண்டுமென்று எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவுத்தொகை வழங்கப்படவில்லை.

இவ்உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் வருடம் ஜூலைத் திங்கள் 9ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.07.09 18:20:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி :

மா.சா.1 -பூங்கோதை

மனுதார் தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| மா.சா.ஆ.1 | 6.2.2014 | மனுதாரரின் மகனின் திருமண பத்திரிக்கை (அசல்) |
| மா.சா.ஆ.2 | 6.2.2014 | மனுதாரரின் மகனுக்கும் எதிர்மனுதாரருக்கு நடந்த திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம். - (அசல்) |
| மா.சா.ஆ.3 | 27.10.2019 | முதல் தகவல் அறிக்கை (நகல்) |
| மா.சா.ஆ.4 | 18.2.2015 | இளவர் ஸ்ரீகஹானின் பிறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| மா.சா.ஆ.5 | 27.10.2019 | மனுதாரரின் மகன் சிவபாலாஜியின் இறப்பு சான்றிதழ் (அசல்) |
| மா.சா.ஆ.6 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை. (நகல்) |

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் -

- அமைத்துக்கொடுக்கப்படவில்லை-

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.07.09 18:21:02 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.